# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 21 வெள்ளிக்கிழமை 05.07.2024 கதிர் 291



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# அரசியலமைப்பின் ஓட்டைகளைப் பயன்படுத்தி ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்க முற்படுதல் ஜனநாயக விரோதமாகும்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் மயந்த திஸாநாயக்க எம்.பி.தெரிவிப்பு



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி மேலும் ஒரு வருடத்திற்கு தனது பதவிக் காலத்தை நீடிக்க முற்பட்டால் அது ஜனநாயக ரீதியில் தவறான விடயம் என நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸ ாநாயக்க தெரிவித்தார்.**

**கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே மயந்த திஸாநாயக்க எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.**

2➤

# “ரணிலுக்கு ஒருநாள் கூட அதிகமாக பதவியில் நீடிக்க பொதுஜன பெரமுன அனுமதிக்காது!”

## பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம்



கோத்தபாய ராஜபக்ஷவிற்கு 5 வருட காலத்திற்கு ஆட்சி வகிக்க மட்டுமே மக்கள் ஆணை கிடைத்தது. அக் காலப் பகுதியில் இடைக்கால ஜனாதிபதியாக பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவை அந்த காலப்பகுதிக்கு அப்பால் ஒரு நாள் கூட ஆட்சியில் நீடிக்க ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன ஆதரவு வழங்காது என அந்த முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

திட்டமிட்டபடி ஜனாதிபதி தேர்தலை நடத்துவதை தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு தொழிலதிபர் ஒருவர் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமைகள் மனு தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் அவ்வாறு பதிலளித்தார்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு சட்ட ரீதியிலான அல்லது தார்மீகரீதியிலான எந்தவொரு அடிப்படையும் இல்லை, என தெரிவித்த அவரிடம், ‘இந்த வழக்கில் ஒரு தரப்பாகச் செயற்படுவீர்களா?’ என கேட்டபோது, இது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ஏற்கனவே கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான யோசனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டால், அதற்கு எதிராக வாக்களிக்கப்படும் எனவும் சாகர காரியவசம் மேலும் தெரிவித்தார். (ரெஜ-13)

# ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமா? ஐக்கிய மக்கள் சக்தியினர் இடையீட்டு மனு

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு இடையீட்டு மனுதாரராக ஐக்கிய மக்கள் சக்தி இன்று உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பர்மான் காசிம் இந்த மனுவைத் தாக்கல் செய்தார். (05)

# கெஹெலியவின் 93 மில்லியன் ரூபா மதிப்புள்ள வங்கிக் கணக்குகளை தடைசெய்ய நடவடிக்கை!

## இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு முனைப்பு



தரமற்ற நோயெதிர்ப்பு தடுப்பூசிகளை சுகாதார அமைச்சின் விநியோக பிரிவிற்கு பெற்றமை தொடர்பில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் சந்தேக நபரான முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மனைவி, மூன்று மகள்மார் மற்றும் ஒரு மகளின் கணவர் ஆகியோரின் பெயரில் தனியார் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள 93.125 மில்லியன் ரூபா பெறுமதியான நிலையான வைப்பு கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதி பத்திரங்கள் ஆகியவற்றை 7 நாட்களுக்கு தடைசெய்வதற்கு, இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

பரிவர்த்தனைகள் சந்தேகத்திற்கு இடமானவை என்பதற்கான சாட்சியங்களுக்கமைய, ஊழல் தடுப்புச் சட்டம் 2023 எண் 9 இன் பிரிவு 53 (1) இன் படி பண சுத்திகரிப்பு மோசடி குற்றத்தின் கீழ் 16 நிலையான வைப்புகளையும் 3 ஆயுள் காப்பீட்டு பத்திரங்களையும் தடை செய்ய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் புகார் செய்து தடை உத்தரவு பெற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெஜ-14)

# மிகுதிக் காசு வழங்க சில்லறை இன்றி பயணிகளுக்கும் நடத்துனர்களுக்குமிடையே தினமும் இழுபறி நிலை!

## அகில இலங்கை பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு



திருத்தப்பட்ட புதிய பஸ் கட்டண அறவிடலின் போது மிகுதிக் காசு வழங்க பஸ் நடத்துனர்களிடம் சில்லறை நாணயங்கள் இல்லாததால் பயணிகளுக்கும் நடத்துனருக்கும் இடையில் தினமும் முரண்பாடுகள் ஏற்படுவதாக அகில இலங்கை பஸ் உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி நாளொன்றுக்கு ஒவ்வொரு பயணிகள் பேரூந்துக்கும் ஆயிரம் ரூபா சில்லறை நாணயங்களை வழங்கினால் இந்நிலைமையை சமாளிக்க முடியும் என தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த திருத்தங்கள் தொடர்பில் தமது தொழிற்சங்கத்துடன் முன்னமே கலந்தாலோசித்திருந்தால் இந்த முரண்பாடுகள் ஏற்பட்டிருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பயணிகளிடம் விசாரித்த போது, நடத்துனர்களிடம் சில்லறைக் காசு கையில் இருந்தாலும் அவர்கள் மிகுதிக் காசு தரப்போவதில்லை!, என தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெஜ-15)



# சம்பந்தனின் புகழுடலுக்கு திருமலையில் அஞ்சலிகள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம்சம்பந்தனின் புகழுடல்திருகோணமலையில் அன்னாரின் இல்லத்தில் இன்று முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அங்கு பலரும் அன்னாரின் புகழுடலுக்கு உணர்வுபூர்மாக அஞ்சலிசெலுத்திவருகின்றனர்.

பெருந் தலைவர் சம்பந்தனின் புகழுடல் யாழ்ப்பாணத்தில் இருந்து இன்று காலை விசேட விமானம் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் சம்பந்தனின் புகழுடலுக்கு நேற்று பலரும் அஞ்சலி செலுத்திய நிலையில் புகழுடல் அங்கேயே வைக்கப்பட்டது.

தந்தை செல்வா கலையரங்கில் இருந்து இன்று காலை கார் மூலம் பலாலி விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட அன்னாரின் புகழுடல், அங்கிருந்து திருகோணமலை - சீனன்குடா விமான நிலையத்துக்கு விசேட விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டது.

திருகோணமலையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள சம்பந்தனின் புகழுடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இறுதிக்கிரியை நடைபெற்று தகனம் செய்யப்படவுள்ளது. (05)

## அரசியலமைப்பின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும்அவர்கூறுகையில், "ரணில்விக்ரமசிங்கவின் பதவிக்காலம் முடிவடையும் திகதிகள் தொடர்பில் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தும் வரையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை தடுக்கும் இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு கோரும் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாட்டின் ஜனநாயகத்தையும் அரசியலமைப்பையும் பாதுகாக்க உச்சநீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்கும் என ஐக்கிய மக்கள் சக்தி நம்புகின்றது. மேலும், ஜனநாயகத்தை பாதுகாத்து, தேர்தல் ஆணைக்குழுவிற்கு இடையூறு இல்லாமல் தேர்தலை நடத்த தேவையான சூழலை அரசாங்கம் தயார் செய்து நாட்டு மக்களுக்கு ஜனநாயக ரீதியாக உரிமைகளை வழங்க முன்வர வேண்டும்.

அடுத்த அரச தலைவரை தெரிவு செய்வதற்கான எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச நிச்சயமாக போட்டியிடுவார். அத்துடன், தேசிய மக்கள் சக்தி சார்பில் அநுர திசாநாயக்க ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா? இல்லையா? என்பது குறித்து இன்னமும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. அவ்வாறே பொதுஜன பெரமுனவும் இதுவரை தமது ஜனாதிபதி வேட்பாளரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு 5 வருட காலத்திற்கே மக்களால் ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த 5 வருடங்கள் தொடர்பாக அரசியலமைப்பில் ஏதேனும் ஓட்டை இருந்தால், அந்த ஓட்டையைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தை நீடிக்க முற்பட்டால், அது ஜனநாயக ரீதியாக தவறான விடயமாகும். அத்துடன் தற்போதைய நாடாளுமன்றமும் நாட்டு மக்களின் கருத்தை பிரதிபலிக்கவில்லை. எனவே, ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலும் நடத்தப்படல் வேண்டும்" - என்றார். (ரெஜ-12)

# யாழ்ப்பாணப் பொலிஸ் பிராந்தியத்திற்கு புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தின் புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக சூரிய பண்டார இன்றையதினம் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இன்று காலை 10 மணியளவில் சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் நடைபெற்ற நிகழ்வில் புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதுவரை யாழ்ப்பாணப்பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சராக கடமையாற்றிய ஜகத் விசாந்த பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றமையால் அவருடைய பதவிநிலைக்கு சூரிய பண்டார நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)



# தீ விபத்தில் 5 குடியிருப்புகள் எரிந்து நாசம் 36 பேர் பாதிப்பு

*தலவாக்கலை, லிந்துலை பெயாவல் தோட்ட பெயாபீல்ட் பிரிவு தோட்டத்திலுள்ள ஐந்து குடியிருப்புக்கள் நேற்று இரவு தீக்கிரையாகியுள்ளன என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்தத்தீ விபத்து காரணமாக 5 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*மின் கசிவு காரணமாக ஒரு குடியிருப்பில் ஏற்பட்ட தீ ஏனைய வீடுகளுக்கும் பரவியது என்று லிந்துலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிசிர குமார தெரிவித்தார்.*

*அந்தத் தொடர் குடியிருப்பில் 24 குடியிருப்புகள் காணப்படுகின்ற நிலையில் ஏனைய குடியிருப்புகளுக்குத் தீ பரவாமல் அந்தத் தோட்டத் தொழிலாளர்களும், லிந்துலை பொலிஸாரும் இணைந்து சுமார் 2 மணி நேரம் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.*

*குயிருப்புகளிலிருந்த பெறுமதியான பொருட்கள், மாணவர்களின் சீருடைகள், பாடசாலை புத்தகங்கள் இன்னும் பல முக்கியமான ஆவணங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.*

*இந்தத்தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவரும் தற்காலிகமாக அந்தத் தோட்ட வாசிகசாலையில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.*

*இவர்களுக்கான உலருணவுகளையும் பொருட்களையும் வழங்குவதற்கு தோட்ட நிர்வாகமும் அந்தப் பகுதி கிராம உத்தியோகத்தரும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.*

*தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட



காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மாவட்ட மட்ட மாற்றுவழி பிணக்கு தீர்வு செயன்முறையினை வலுப்படுத்தல்





(ஹஸ்பர் ஏ.எச்)

ஐரோப்பிய ஒன்றியத்தின்நிதியுதவியுடன் பிரிட்டிஷ் கவுன்சிலின் தலைமையில் சேர்ச் போர் கொமன்ட் அமைப்பினால் நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்ட மாற்றுவழி பிணக்கு தீர்வு திட்டமானது செயற்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்கானது, இலங்கையில் இலக்கு வைக்கப்பட்ட ஆறு மாவட்டங்கள் மற்றும் பன்னிரண்டு பிரதேச செயலக பிரிவுகளில் முரண்பாடுகளை சாதகமான முறையில் நிலைமாற்றம் செய்யவும் மற்றும் வன்முறை அதிகரிப்பதைத் தடுக்கவும் உள்ளூார் மட்ட மாற்றுவழி பிணக்கு தீர்வு வழிமுறைகளை (ஏடிஆர் மன்றங்களை) வலுப்படுத்துதலுமாகும்.

ஏடிஆர் மன்றமானது இலகுபடுத்தல், ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் பேரம் பேசுதல், மத்தியஸ்தம் போன்ற அணுகுமுறைகளுக்கூடாக சமூக மட்ட பிணக்குகளை பயனுறுதி மிக்க வகையில் நிலைமாற்றம் செய்ய அல்லது தீர்ப்பதற்கு சிறந்த ஒரு தளமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் சேர்ச் போர் கொமன்ட்டுடன் இணைந்து விழுது ஆற்றல் மேம்பாடு மையம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இம்மாதம் மாதம் 2 ம் மற்றும் 3 ம் திகதிகளில் மூதூர், தம்பலகாமம் பிரதேச குழுவினர்களை ஒன்றிணைத்து மாவட்ட மட்ட செயலமர்வு மூதூர் பேல் கிரான்ட் அறையில் இடம்பெற்றது.

இப்பயிற்சியின் மூலம் பிரதேசத்தில் ஏடிஆர் மன்றங்களுக்கு தேவையான பயிற்சியை சிரேஷ்ட சட்டத்தரணி ஐங்கரன் குகதாசன் வழங்கினார். ஏடிஆர் வழிமுறைகள், எளிதாக்குதல், மத்தியஸ்தம், பேச்சுவார்த்தை, மற்றும் நடுவர் ஆகியவற்றில் பகிரப்பட்ட அறிவு மற்றும் திறன்களுக்கான இடத்தை உருவாக்குவதை இந்தப் பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த திட்ட நடைமுறைகளை மேற்பார்வை செய்வதற்காகவும் இதன் முன்னேற்றகரமான செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்க, திட்டத்தின் குழுத்தலைவர் ஜாக் கார்ஸ்டென்ஸ் மற்றும் திட்ட முகாமையாளர் அல்டென் பெர்க் மற்றும் திட்ட மேற்பார்வையாளர் உதரா ஜெயசேனா மற்றும் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் போனி வின்சென்ட் போன்றவர்கள் மாவட்டமட்ட மாற்றுவழிப் பிணக்குத் தீர்வுத் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்த உரையாடல், பிரதிபலிப்பு மற்றும் அவதானிப்புகளில் ஈடுபடுவதற்காக அவர்கள் திருகோணமலை மூதூர் பகுதிக்கு வருகை தந்தனர்.

இந்த நிகழ்வில் எம்.எஸ்.எம். நசீர், சேர்ச் போர் கொமன்ட் திட்ட மேலாளர் மற்றும் உவைசுல் கர்னி, அதனது மாகாண ஒருங்கிணைப்பாளர் மற்றும் விழுது ஆற்றல் மேம்பாட்டு நிறுவனத்தின் கள ஒருங்கிணைப்பாளர் டி.எம்.ஹிஷாம் மற்றும் திருமதி இதையா போன்றவர்களும் கலந்து கொண்டனர்.






## உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் நாளை 6 ஆம் திகதி ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை 6 ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தெரிவித்தார்.

உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலய கொடியேற்றம் ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 16 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெறவுள்ளது.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க, கதிர்காமத்துக்கான உகந்தைமலை ஊடான காட்டுப்பாதையில் பயணிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரித்தானியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஈழத்தமிழ் வம்சாவழிப் பெண் உமா குமரன் வெற்றி!

2024ஆம் ஆண்டு பிரித்தானியப் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி மாபெரும் வெற்றி பெற்றுள்ள நிலையில் பிரித்தானியத் தேர்தலில் கவனம் ஈர்த்துவந்த இலங்கைத் தமிழ் வம்சாவழிப் பெண் வேட்பாளர் உமா குமரன் வெற்றி பெற்றுள்ளார்.

பிரித்தானியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றிருந்தது. தொழிற்கட்சி சார்பில், ஸ்டார்போட் பவ் தொகுதியில் போட்டியிட்ட உமா குமரன் அத்தொகுதியில் வெற்றியடைந்துள்ளார்.

வரலாற்றில் முதல் முறையாக பிரித்தானியாவில் 8 தமிழர்கள் பிரித்தானியப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றிருந்தது உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் கவனத்தை ஈர்த்திருந்தது.

பிரித்தானியத் தேர்தலில் ஈழத் தமிழர் ஒருவர் வெற்றிபெற்றால் அது இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் நகர்வுகளுக்கு வலுச் செய்வதாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் உமா குமரனின் வெற்றியானது ஈழத் தமிழர்களின் எதிர்கால அரசியல் நகர்வுகளில் தாக்கம் செலுத்தும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (04)






## ஏஜ வடிவில் விஜயகாந்த்தைப் பயன்படுத்தப்போவதாக தகவல்! முறையான அனுமதி குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள தே.மு.தி.க

ஏஜ தொழிநுட்பத்தின் மூலம் திரைப்படங்களில் மறைந்த தமிழ் நடிகரும் அரசியல் தலைவருமான விஜயகாந்தைப் பயன்படுத்தவிருப்பதாக சில தகவல்கள் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்டு அவரது கட்சியான தே.மு.தி.க.வின் தலைமைக்கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது


அந்த அறிக்கையில், தமிழ்த் திரை உலகை சேர்ந்த அனைவருக்கும் அன்பான வேண்டுகோள், விஜயகாந்தை ஏஜ தொழிநுட்பத்தின் மூலம் திரைப்படங்களில் பயன்படுத்த இருப்பதாக தொடர்ந்து செய்திகள் வருகின்றன.

இதுபோன்ற செய்திகள் ஆடியோ வெளியீட்டு விழாவில் இருந்து வருகின்றன. எங்களிடம் முன் அனுமதியில்லாமல் இது மாதிரியான அறிவிப்புகள் வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். எந்த விதத்தில் பயன்படுத்துவதாக இருந்தாலும் முறையாக அனுமதி பெற்ற பின்பே, அறிவிப்பை வெளியிட வேண்டும்.

ஏஜ தொழிநுட்பத்தின் மூலம் திரைப்படங்களில் பயன்படுத்த இருப்பதாக இதுவரை யாரும் எந்த அனுமதியும் பெறவில்லை என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே, அனுமதியில்லாமல் பத்திரிகைச் செய்திகள், இலத்திரனியல் ஊடகச் செய்திகள், ஆடியோ வெளியீட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளில் இவ்வாறான செய்திகளை வெளியிடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும், என குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

## பிரித்தானியப் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சிக்கு மாபெரும் வெற்றி!




2024 ஆம் ஆண்டு பிரித்தானியப் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

பிரித்தானியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நேற்று நடைபெற்று நிறைவடைந்திருந்தது.

பிரித்தானியாவில் தேர்தலுக்கு முன்னரே பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ்

கட்சி படுதோல்வியடையும் எனவும் தொழிற்கட்சி மாபெரும் வெற்றி பெறும் எனவும் கருத்துக் கணிப்புகள் கூறியிருந்தன.

பிரித்தானியாவில் 650 நாடாளுமன்றத் தொகுதிகளில் பெரும்பான்மையைப்பெற 326 இடங்களில் வெற்றி பெற வேண்டும். அவ்வாறு பெரும்பான்மையைப் பெறும் கட்சியின் தலைவர் பிரதமராக பொறுப்பேற்பார்.

இதன்படி, தொழிற் கட்சிக்கு 410 இடங்களும், கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 131 இடங்களும், லிபரல் டெமோக்ராட் கட்சிக்கு 61 இடங்களும் கிடைக்கும் என கருத்துக்கணிப்புகள் கூறியிருந்தன. தற்போது தொழிற்கட்சி பெரும்பான்மையான 326 ஐத் தாண்டியுள்ளது.

இதையடுத்து, பிரித்தானியாவில் தற்போது மாற்றம் ஆரம்பித்துள்ளதாக தொழிற்கட்சித் தலைவர் சர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார். மத்திய லண்டனில் நடைபெற்ற வெற்றிப் பேரணியில் தொழிற்கட்சி தலைவர் தனது ஆதரவாளர்களிடம் இவ்வாறு கூறியுள்ளார்.

தொழிற்கட்சியின் வெற்றியானது 14 ஆண்டுகால கன்சர்வேடிவ் அரசாங்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளமை குறிப்பித்தக்கது. (04)

## கூட்ட நெரிசலில் சிக்கி 120க்கும் மேற்பட்டோர் மரணம் உத்தரப் பிரதேசத்தில் சொற்பொழிவு நிகழ்வில் சோகம்!

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் உள்ள புல்ராய் கிராமத்தில் போலே பாபா என்ற சாமியார் நடத்திய இந்து மத ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்வின் கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் வரை உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

80,000 மக்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்ட நிலையில் 2.5 லட்சம் பேரை சட்டவிரோதமாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் அனுமதித்துள்ளனர். நிகழ்ச்சி முடிந்ததும் ஒரு சாரார் வெளியேறும் வாயிலை நோக்கி முன்னேறிய நிலையில் மற்றொரு சாரார் போலே பாபாவின் காலடி மண்ணை எடுப்பதற்காக எதிர்புறமாக முன்னேறியதால் இந்தக் கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.



இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவை சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 4 ஆண்கள், 2 பெண்கள் என அந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களிடம் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டு குழுவில் சேவகர்களாக பணியாற்றியவர்கள் என தகவல் வெளியாகியுள்ளது. தலைமறைவாகியுள்ள முக்கிய சந்தேக நபரான பிரகாஷ் மதுகரைப் பற்றிய தகவல் தருவோருக்கு சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரகாஷ் மதுகருக்கு எதிராக பிணையில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (04)

# அச்சுவேலியில் பக்தி பூர்வமாக இடம்பெற்ற அர்ச்சனைப் பூக்கள் இசைப்பேழை வெளியீடு





அச்சுவேலி காட்டுமலை கந்தசுவாமி மீது ரஜரட்ட பல்கலைக்கழக மாணவி பா. அர்ச்சனாவால் எழுதிப் பாடப்பட்ட அர்ச்சனைப் பூக்கள் என்ற இசைப்பேழை வெளியீட்டு விழா கடந்த புதன் (03) இரவு 9.15 மணிக்கு காட்டுமலை கந்தசுவாமி ஆலய முன்றிலில் சப்பரத் திருவிழா நிறைவில் நடைபெற்றது.

மன்னார் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான. ஆதவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர் ச.சத்தியவரதன், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆற்றினார். ஆசியுரையை ஆலயபிரதம குரு சீ.சி.சி.சிவானந்தம் ஐயர் வழங்கினார். யாழ். பல்கலைக்கழக பண்டிதர் கற்கை வருகை விரிவுரையாளர் பண்டிதை தவபாலன் சியாமினி, சைவப்புலவர் கி. வரதராசா ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். அச்சுவேலி நிதர்சன் பாடல்களுக்கு இசை வழங்கி உள்ளார். இசைப் பேழையை ஆலய பிரதம குரு சீ.சி.சி. சிவானந்தம் ஐயர் வெளியிட்டு வைக்க செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் பெற்றுக் கொண்டார்.

1929 இல் தமிழ் வழிபாட்டிற்கு முதன்மை கொடுத்து வேலினை மூலவராகக் கொண்டு நிறுவப்பட்ட இந்த ஆலயத்தில் தற்போது வெளியிடப்பட்ட இசைப்பேழை 10 ஆவது இசைப் பேழை என்று தெரிவிக்கப்பட்டது.

# அம்பாறை அரச உத்தியோகத்தருக்கு நிலை மாறுகால நீதிச் செயலமர்வு



(எம் எப்.நவாஸ்)

இலங்கை தேசிய சமாதான பேரவை மற்றும் றுகுனு லங்கா இணைந்து ஒழுங்கமைத்த அம்பாறை மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு நிலை மாறுகால நீதி சம்பந்தமாக மாவட்ட அளவிலான தகவல் அமர்வுகள் அட்டாளைச்சேனை பல் தேவை கட்டிடத்தில் அண்மையில் நடைபெற்றன .

இதில் இலங்கை தேசிய சமாதான பேரவை நிறைவேற்றுப் பணிப்பாளர் டாக்டர் ஜெகன் பெரேரா, அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிர் (சட்டத்தரணி), றுகுனு லங்கா தலைவர் எம்.எஸ். ஜஃபர், திட்ட முகாமையாளர் எம். எஸ்.எம்.அக்ரம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கலாசார உத்தியோகத்தர்கள், தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






## அக்கரைப்பற்றில் தேசிய சுற்றாடல் பாதுகாப்பு வாரத்தில் மர நடுகை

(எம் எப் நவாஸ்)

தேசிய சுற்றாடல் பாதுகாப்பு வார்த்தை அனுஷ்டிக்கும் முகமாக அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க வளாகத்தில் அரிய இன பழ மர கன்றுகளை நடும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் ரீஎம்எம்.அன்சாரின் பங்குபற்றுதலில் முகாமைத்துவ பணிப்பாளரின் நெறிப்படுத்தலின் கீழ் ஒழுங்கு படுத்தப்பட்டு, உதவிப் பிரதேச செயலாளர்,

பிரதி திட்டமிடல் பணிப்பாளர், தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர், கருத்திட்ட முகாமையாளர், கிராமசேவக நிருவாக உத்தியோகத்தர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கட்சியிலிருந்து சரத் பொன்சேகாவை வெளியேறுமாறு சஜித் அணி அழுத்தம்

“ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சரத் பொன்சேகா எந்நேரமும் வெளியேறலாம். அவருக்கான கதவு திறந்தே உள்ளது” – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது –

“அரச தரப்பின் ஒப்பந்தத்தையே சரத் பொன்சேகா நிறைவேற்றி வருகின்றார். அவரின் நூல் வெளியீட்டு நிகழ்வைக்கூட ஜனாதிபதி செயலகமே நடத்தி இருந்தது. எனவே, அவர் தற்போது எந்தப் பக்கம் நிற்கின்றார் என்பது தெளிவாகின்றது. அவர் எமது அணியில் இருந்து வெளியேறலாம். அதனால் பாதிப்பில்லை. ஆனால், இப்படி கட்சியை, தலைமையைத் தாக்கிவிட்டு விடை பெற முற்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.

அதேவேளை, ஆளுங்கட்சியில் உள்ள சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர். டலஸ் அழகப்பெருமவுடனும் பேச்சு நடத்தப்படுகின்றது.

எனக்குப் பிரதமர் பதவி ஆசை இல்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெற வைப்பதே எமது நோக்கம்” – என்றார். (05)










## சமூக முன்னோடி சட்டத்தரணி முத்துமீரானின் பேனாமுனை ஓய்ந்தாலும் புகழ் ஓங்கியே நிற்கும்!

### ரிஷாட் எம்.பி அனுதாபச்செய்தி



எழுத்து, இலக்கியம் மற்றும் அரசியற் செயற்பாடுகளால் சமூக முன்னோடியாகத் திகழ்ந்தவர் சட்டத்தரணி எஸ்.முத்துமீரான் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முத்துமீரான் இறையடி சேர்ந்ததையிட்டு, அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில்,

“நாடறிந்த இலக்கியவாதியின் இழப்பு நமது சமூகத்தின் பேனா முனைக்கு விழுந்த பேரிடி. முஸ்லிம்களின் மரபியல் செயற்பாடுகளை எழுத்துக்களாக்கிய இவரது பேனா ஓய்ந்தாலும், அவரது புகழ் ஓயாது.

சமூகத்தின்பிரதிபலிப்புக்கள் இவரது இலக்கியத்தின் பேசுபொருளாகின. சிறந்த சட்டத்தரணியாகப் பணியாற்றி, பல விடயங்களில் தனக்கிருந்த ஆவல்களை அடையாளப்படுத்தினார். ஆசிரியர் பணியிலும் முத்துமீரானின் ஆளுமைகள் அலங்காரமாகவே அடையாளமாகிறது.

அரசியல் ரீதியாக நெருங்கிப் பழகாவிடினும், எமது கட்சியை நெறிப்படுத்துவதில் கண்ணாகச் செயற்பட்டவர். இவரது மகனின் மனைவியார், மூதூர் பிரதேச சபை உறுப்பினராகச் செயற்பட்டவர். மகனார் எமது கட்சியின் தீவிர செயற்பாட்டாளர். விதியின் ஏற்பாடுகள் எல்லோரையும் உலகத்தைவிட்டுப் பிரிக்கவே செய்யும்.

எல்லாம் வல்ல இறைவன் பிரிவுகளைத் தாங்கும் மன பலத்தை எமக்குத் தரட்டும்! தோப்புமீரானுக்கு சொர்க்க வாசல் திறக்கட்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ்! அன்னாரைப் பொருந்திக்கொண்டு, அவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர் மிகு சுவன பாக்கியத்தை வழங்குவானாக..! ஆமீன்..!” –என்று தெரிவித்துள்ளார்.

*(04)*








## சென்நெல் கிராம பிரதேச வைத்தியசாலை தேசிய மட்டத்தில் முன்னணி இடம் பெற்றது

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை சென்நெல் கிராமத்தில் மிக நீண்டகாலமாக இயங்கி வந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையமானது சென்னல் கிராம பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டு ஓராண்டு நிறைவடைவதற்கு முன்பே தொற்றா நோய்களான நீரிழிவு, இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல், சிறுநீரகப் பாதிப்பு போன்றவற்றைக் கண்டறிவதற்கான ஆரம்ப கட்ட பரிசோதனைகளையும், சுகாதார ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும், மேற்கொண்டமைக்காக தேசிய மட்டத்தில் எட்டாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனைப்பெறுவதற்கு காரணமாக இருந்த இவ்வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதார உதவியாளர்கள், முன்பு பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும்பாராட்டப்படக்கூடியவர்கள் என்று அப்பிரதேச மக்கள்தெரிவித்தனர்.

## பெண் பொலிஸ் ஒருவர் குளிப்பதை படம் எடுத்த ஆண் பொலிஸ் கைது

பெண் பொலிஸார் விடுதியின் குளியறையில் குளித்துக் கொண்டிருந்த பெண் பொலிஸ் கொஸ்தாபலை மறைந்திருந்து படம் பிடித்த ஆண் பொலிஸ் கொஸ்தாபல் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நுவரெலியா மாவட்ட நீதிவான் பிரபுதிகா நாணயக்காரவால் இந்த உத்தரவு நேற்று மாலை பிறப்பிக் கப்பட்டது.

லிந்துலை பொலிஸ் நிலையத்தின் பெண் பொலிஸார் தங்குமிட விடுதி குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த பெண் பொலிஸ் கொஸ்தாபலை அதே பொலிஸ் நிலையத்தில் கொஸ்தாபல் பதவி வகிக்கும் ஆண் பொலிஸ் கொஸ்தாபல் தனது ஸ்மார்ட் போனால் படம் பிடித்து வைத்திருந்துள்ளார். இந்த விடயம் ஏனைய பொலிஸாருக்குத் தெரியவந்ததையடுத்து விசாரணைகள் தொடரப்பட்டு மேற்படி பொலிஸ் கொஸ் தாபல் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சந்தேகநபரை கைது செய்த லிந்துலை பொலிஸார், அவரை நேற்று நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இதன்போது இது தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிபதி பிரபுதிகா நாணயக்கார , சந்தேகநபரான பொலிஸ் கொஸ்தாபலை எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய் கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். (05)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!